3. கேள்விப்படிவம் அடக்கப்படட உறை முத்திரையிடப்பட்ட அதன் இடதுபக்க மேல் மூலையில் "நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் இல. 02 - பிறதேச தவணைக்கான கேள்வி - 2007" என எழுதப்பட்டு குறிப்பிட்ட நேரத்திற்குள் எனக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்வியாளர்கள் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரத்தில் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பிரசன்னமாயிருத்தல் வேண்டும்.

5. வெற்றிபெறும் கேள்வியாளர்கள் கேள்விகள் திறந்த பின் அறிவிக்கப்படுவதுடன் மேலே காட்டப்பட்ட பிறதேச குடிவகை விற்பனை நிபந்தனைகளின் பிரகாரம் விற்பனை நிபந்தனைகளில் கைச்சாத்திட்டு பிணைப் பணமாக தீர்மானிக்கப்படும் பிணைப்பணம் என்னிடத்தில் செலுத்தப்படல் வேண்டும்.

6. தெரிவாகிய கேள்வியாளர் பற்றி ஏற்றுக்கொண்டதாக அறிவித்ததும் ஒப்பந்தம் கைச்சாத்திடல் அல்லது கட்டுப்பணம் செலுத்துவதை தாமதம் செய்தல் அல்லது தவறுதல் செய்யுமிடத்து கேள்வி முற்பணம் (உத்தரவாதப் பணம்) மீளக்கொடுபடாது விடுவதுடன் மதுவரி அனுமதிப்பத்திரதாரர்களின் பட்டியலில் குற்றவாளியென இடம் பெறச் செய்ய முடியும். தெரிவாகிய அல்லது வழங்கவிருக்கும் கேள்வியாளர்களால் முழுப் பிணைப்பணம் செலுத்தப்பட்டு கைச்சாத்திடப்பட்டதும் கேள்விதாரரின் முற்பணம் (உத்தரவாதப் பணம்) மீளக் கொடுபடும்.

7. எவ்வித காரணமும் காட்டப்படாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எல்லா கேள்வி விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் அதிகாரம் எனக்குண்டு.

8. 2007 ஆம் வருடத்திற்கான தற்போது தவறண நடைபெற்றுக்கொண்டிருக்கும் இடத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது பற்றி சொல்ல முடியாது. எல்லா இடங்களும் (மனைகளும்) எனது முழு அனுமதியும் பெற்ற மனைகளாக இருப்பது அவசியம்.

9. 28.09.2006 ஆந் திகதி விற்பனைக்கு விடாத பிறதேச தவறணைகள், 27.10.2006 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு மீண்டும் விற்கப்படும்.

10. மேலதிக விபரங்கள் தேவைப்படுமாயின் நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

டபிள்யூ. பீ. எம். ஜி. ஆர். எஸ். கே. முஹந்திரம்,
பிரதேச செயலாளர்,
நீர்கொழும்பு.

எனது இலக்கம் : 03/01/வெளி /2007/நீர்.
பிரதேச செயலகம்,
நீர்கொழும்பு.
2006, ஓகத்து 11.

8-936/2

---

# ஏல விற்பனைகள்

### செலான் வங்கி லிமிட்டெட்-பொலன்னறுவைக் கிளை

*1990 ஆம் ஆண்டு வங்கியினால் கடன்களை மீள அறவிடுதல் 4 ஆம் இலக்க சட்டத்தின் (விசேட சரத்துக்கள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை நகரசபை எல்லைக்குட்பட்ட தொடந்தெனிய கிராமத்தில் இல. 35/12 இல் அமைந்துள்ள "ஹெரமிட்டகே பொல்வத்த" அல்லது "கஹடகஹகும்புர" என்றழைக்கப்படும் அனுமதிபெற்ற நில அளவையாளர் எஸ். ரந்சாகொடவினால் எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு சனவரி மாதம் 15 ஆந் திகதி வரைவு இலக்கம் 4325 துண்டு இல. 01 பெறுமதிவாய்ந்த இருபத்தைந்து தசம் ஆறு இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 25.62) விஸ்தீரணம் கொண்ட காணியும் அதில் உள்ள மரம்செடி, கொடிகள் காணியைச் சென்றடைகின்ற பாதை அடங்கலாக அனைத்தையும் உள்ளிட்ட காணி ;**

**மேலும் மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டம், மாத்தளை நகரசபை எல்லைக்குட்பட்ட கொஹென்ஸிய பற்று கடவத்தேகம கிராமத்தில் அமைந்துள்ள அம்பகஹமுல்ல வத்த என்றழைக்கப்படுகின்ற அனுமதிபெற்ற நில அளவையாளர் ஈ. வீ. சிரிசுமனவினால் 2002 ஆம் ஆண்டு யூன் மாதம் 19 ஆந் திகதிய வரைவு இல. 2663 துண்டு இல. 01 என அடையாளமிடப்பட்ட முப்பத்தெட்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 38.5பே.) விஸ்தீரணம் கொண்ட காணியும் குறித்த காணியைச் சென்றடைகின்ற பத்து அடி அகலப் பாதை உள்ளிட்ட நிலம், அதில் உள்ள மரம், செடி கொடிகள் அடங்கலாக அனைத்தையும் உள்ளிட்ட காணி ஏல விற்பனை**

*(கடன்பட்டார் என்றவகையில் உரிமையாளர் கண்டியைச் சேர்ந்த நுவரகெதர அப்துல் லதீப் முஹம்மது அன்ஸார் என்பவருக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி லிமிட்டெட்டிற்கு ஈடுவைக்கப்பட்ட காணி)*

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணிகளை நான் 2006, செத்தெம்பர் 19 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**தீர்மானம் பற்றிய மேலதிக விபரங்களுக்கு.**- 2005.05.06 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2004.12.08 ஆந் திகதிய "தினமின", "டெய்லி நியூஸ்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணிக்குச் சென்றடைகின்ற வழி.**- மாத்தளை நகரத்திலிருந்து கூம்பியகொட வீதியூடாக சுமார் 850 மீற்றர் வரை சென்று வலதுபக்கம் திரும்பி தொடந்தெனிய வீதி ஊடாக சுமார் 500 மீற்றர் வரை சென்று குறித்த காணியைச் சென்றடையலாம். இடது பக்கமாகத் திரும்பி கடவத்தேகம வீதியில் (20 அடி வாகனப் போக்குவரத்து கிராமசபை செம்மண் பாதை) சுமார் 100 மீற்றர் சென்று குறித்த காணியைச் சென்றடையலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிகரமான கொள்வனவு தாரர் ஏலவிற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்துதல் வேண்டும் :-

கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), விற்பனை வரியாக உள்ளூர் அதிகாரசபைக்கு செலுத்த வேண்டியது ஒரு வீதம் (1%), ஏலதாரர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2%), விற்பனை நிலத்துக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000, இலிகிதர் மற்றும் கூவுவோர் கூலி ரூபா 500, விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு, கொள்வனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி லிமிட்டெட்டில் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி உறுதி மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை "கொழும்பு 3, காலி வீதி, இல. 90, செலான் வங்கி லிமிட்டெட், பிரதிப் பொது முகாமையாளர் (சட்டம்)" இடமிருந்து பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. : 011-2456263, 2456284, 2456285, 2456291.

துசித கருணாரத்ன (சமாதான நீதவான்),
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலொன்னாவ,
தொலைபேசி இல.: 2696155, 2572940

8-887

---

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்-இரத்தினபுரிக் கிளை

சப்ரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டம், மதபத்து குருவிட்ட கோரலயில் குருவிட்ட பிரதேச சபை எல்லைக்குள் குருவிட்ட கிராமத்தில் அமைந்துள்ள நகரசபை வீதி மற்றும் முட்டுவகல்ல அமைந்துள்ள இலக்கம் 99/15 கட்டிடமும் நில அளவையாளர் டபிள்யூ. ஏ. ஜி. விஜயசிங்க நில அளவையாளரின் 27.11.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1645 இல் காண்பிக்கப்பட்ட தெண்ணயேன என்ற காணியில் லொட் 1 ஏல விற்பனை
(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 32.5பே.)

*(கடன் எடுத்த ஒந்தமுணி தேவகே கீர்த்தி ரஞ்சித் அமரதுங்க மற்றும் ராமனாயக்க ஆராச்சிலேகே சிரியாணி குமாரி என்பவர்கள் மேற்படி உரிய ஆதனத்தை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின்கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் விவரிக்கப்பட்ட ஆதனம் அதே இடத்தில் என்னால் 2006, செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படும்.

விளம்பரத் தீர்மானத்துக்காக 19.11.2004 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் மற்றும் 22.10.2004 ஆந் திகதியுடைய புதினப் பத்திரிகைகளான "லங்காதீப", "தினகரன்" மற்றும் "த ஐலன்ட்" மற்றும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 25.08.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 25.08.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி.**- இரத்தினபுரி-பாணந்துறை பிரதான வீதியில் இதன்கொட கிராமத்திற்கு அருகில் அமைந்துள்ள பாலத்தில் இருந்து 200 மீட்டர் முன்னால் மட்டுவகெல எஸ்டேட் வீதியில் இக்காணி அமைந்துள்ளது. வாகனத்தில் செல்ல முடியுமானால் இக்காணி பௌத்த விகாரையைத் தாண்டி இக்காணி பிரதான வீதியில் இருந்து மீட்டர் 230 தொலைவில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவு விலையின் 2.5% ;
(4) விற்பனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்கான செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் இரத்தினபுரி கிளையில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும். உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களை பின்வரும் இடத்தில் பெற முடியும் :-

முகாமையாளர்,
கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்,
408-410, பிரதான வீதி,
குடுகல்வத்த,
இரத்தினபுரி.
தொலைபேசி இல. : 045-2223639
045-2230354-5
தொலைநகல் இல. : 045-2230356

எல். பி. சேனநாயக்க,
பிரதான உத்தரவுபெற்ற ஏலதாரர் (அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்), விலைமதிப்பிடுநர்,
மேலதிக வர்த்தக நீதிமன்றம் மற்றும் கொழும்பு மாவட்ட நீதிமன்ற ஆணையாளர்,

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/
தொலைநகல் : 011-2445393

8-894

---

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்-பொரளை கிளை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அதிகாரிபத்து சியன கோரலயில் மாபிம கிராமத்தில் அமைந்துள்ள தெல்காவத்த என்ற காணியின் நில அளவையாளர் டபிள்யூ. அயான்கமவின் 03.01.1994 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 6333 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய லொட் டி 2 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து ஏல விற்பனை
(காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 0றூ. 9பே.)

*(கடன் எடுத்த மற்றும் காணியை ஈடுவைத்த அஜித் சிவன்க அமரகோன் மற்றும் சித்ரா தமயந்தி அமரகோன் என்பவர்கள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளனர்)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் இதற்கான அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனத்தை என்னால் அதே இடத்தில் 2006, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி காலை 11.30 மணிக்கு பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படும்.

**விளம்பரத் தீர்மானத்துக்காக.**- 02.08.2001 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 02.08.2001 ஆந் திகதியுடைய "த ஐலன்ட்", "லங்காதீப" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 25.08.2006 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும் 28.08.2006 ஆந் திகதியுடைய "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்குச் செல்லும் வழி.**- கொழும்பில் இருந்து கடுவெல சந்தி வரை சென்று அதன் பிறகு பியகம வீதியில் சென்று 250 யார் தூரம் சென்று பண்டாரவெல சந்திக்கு (பியகம சந்தி) அதன் பிறகு இடதுபக்கம் திரும்பி பியகம வீதியூடாக 1-1/4 தூரம் சென்று ரகவத்த சந்தியை அடையவும். அதன் பிறகு கணவேல வீதியில் வலதுபக்கம் சென்று 1/2 மைல் தூரம் சென்று இடதுபக்கம் விகாரைக்குப் பின்புற வீதியில் சென்ற பிறகு 10 யார் சென்ற பிறகு காணிக்கு அடைய முடியும். இக்காணி வலதுபக்க வீதியில் இருக்கிறது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- ஏலவிற்பனையின் இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணமான கொள்வனவு விலையின் 2.5% ;
(4) விற்பனைப் பத்திரத்தை தயாரிப்பதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்கான செய்யப்பட்ட விளம்பரச் செலவுகள் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஐ ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பொரலை கிளையில் செலுத்த வேண்டும். உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களை பின்வரும் இடத்தில் பெற முடியும் :

முகாமையாளர்,
கமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்-
பொரளை கிளை,
இல. 92, டி. எஸ். சேனநாயக்க
மாவத்தை,
பொரளை.
தொலைபேசி இல. : 2687050,
2687051-3
2670984-5
தொலைநகல் இல. : 2687052

எல். பி. சேனநாயக்க (ஜே. பி.),
பிரதான உத்தரவுபெற்ற ஏலதாரர்
(அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்),
விலைமதிப்பிடுநர், மேலதிக வர்த்தக மற்றும்
கொழும்பு மாவட்ட நீதிமன்ற ஆணையாளர்,

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/
தொலைநகல் : 011-2445393

8-895

---

**ஆர். எஸ். எம். ஏலவிற்பனைகள்**

திரு. சீ. பீ. சமன் ஃபெனாண்டோ, சீ. தர்மசிரி ஃபெனாண்டோ, செல்வி திலந்தி விநோதனி ஃபெனாண்டோ ஆகியோருக்கு எதிராக மூன்று கோடியே தொண்ணூற்றாறு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து எண்ணூற்றிமுப்பத்தொரு ரூபா நாற்பத்திரண்டு சதத்தை (ரூ. 3,96,22.831.42) 2000, ஓகத்து 09 ஆந் திகதியில் இருந்து வருடாந்த வட்டியாக 21.5%, வருடாந்தம் 1% ப்படி பீ. ரீ. ரீ., 2001, ஏப்பிறல் 01 வரை வருடாந்தம் 6.5% வீதப்படி பாதுகாப்பு வரி, அதன்பின் குறைவடையும் திகதிவரை வருடாந்தம் 7.5% வீதப்படியும், அதன்பின் முழுமையாகச் செலுத்தப்படும்வரை குறைவடையும் திரட்டிய தொகை, வழக்குத் தொகை, ஏலதாரர் அறவீடுகள் என்பவற்றுடன் மீள அறவிட்டுக்கொள்வதற்காக கொழும்பு 01, பிறிஸ்டல் வீதி, இல. 21, கொமர்ஷல் வங்கி லிமிட்டெட்டால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இல. எச். சீ. சிவில் 259/ 2002 இல் கொமர்ஷியல் உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின்கீழ், கீழே குறிப்பிடப்படும் கல்கிஸ்ஸ, காலி வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 135ஏ எனும் சொத்தை நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன். விற்பனை 2006.09.25 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் இடம்பெறும்.

**அட்டவணை**

அனுமதிபெற்ற நில அளவையாளர் ஜீ. எல். பீ. நாணயக்கார அவர்களால் 1987, திசெம்பர் 08 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபட இல. 5256 இல் துண்டு “கே” எனக் குறிக்கப்பட்ட வரிமதிப்பீட்டிலக்கம் 131 (பகுதி), காலி வீதி (மீள அளக்கப்பட்ட மற்றும் அனுமதிபெற்ற நில அளவையாளர் ஜீ. எல். பீ. நாணயக்கார அவர்களால் 1987.01.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 4551 இல் குறிக்கப்பட்ட துண்டுகள் “பீ”, “ஈ” மற்றும் 1987, செத்தெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 5148 இல் குறிக்கப்பட்ட துண்டு “எச்” ஆகிய இணைக்கப்பட்ட 3 துண்டுகளின் உப பிரிவு) எனும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட களுஹாமினேவத்த என அழைக்கப்படும் காணியானது, மேல் மாகாணம், கொழும்பு மாவட்ட, சல்பிட்டி கோரளை பள்ளேபற்றுவில் தெஹிவலை-கல்கிஸ்ஸ மாநகரசபை எல்லைக்குள் இரத்மலானையில் அமைந்துள்ளது. சொல்லப்பட்ட காணித்துண்டு “கே” வரைபட இல. 1040 இலுள்ள துண்டு “ஏ 2” ஆல் வடக்கிலும் ; வரைபட இல. 5148 இலுள்ள துண்டு “ஜே” ஆல் கிழக்கிலும் ; காலி வீதி, வரிமதிப்பீட்டிலக்கம் 137 ஆல் தெற்கிலும் ; வரைபட இல. 4728 இலுள்ள துண்டு “ஜீ” மற்றும் துண்டு “எல்” மேற்கிலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. வரைபட இல. 5256 இன் பிரகாரம் விஸ்தீரணம் பதினான்கு தசம் நான்கு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 14.40பே.) இதனுடன் கட்டிடங்கள் மற்றும் அதிலுள்ள அனைத்துடன், கொழும்பு காணிப்பதிவகத்தில் அத்தியாயம்/பக்கம் எம் 1529/276 இல் பதியப்பட்டுள்ளது. அத்துடன் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள பாதை ஒதுக்கீடும் உள்ளடங்கும் :- வரைபட இல. 5256 இல் துண்டு “எல்” எனக் குறிக்கப்பட்ட, பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணி (10 அடி அகலப் பாதைக்கான ஒதுக்கீடு).

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலத்தின் இறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வருவனவற்றைப் பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) உள்ளூராட்சி சபை அறவீடுகளாக 1% மற்றும் வெட் ;
(3) ஏலதாரர் தரகுப்பணமாக 2 1/2% ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் சம்பளம் மற்றும் தொழிலாளர் கட்டணங்கள் ;
(5) நொத்தாரிசின் அத்தாட்சிப்படுத்தலுக்கான கட்டணமாக ரூபா 2,000 ;
(6) ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள், எஞ்சிய 75% ஐ, இவ்வழக்கில் வரவில் வைப்பதற்காக கொமர்ஷியல் உயர் நீதிமன்றில் வைப்பிலிட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- கொழும்பு 01, பிறிஸ்டல் வீதி, இல. 21, கொமர்ஷியல் வங்கி, திரு. சமன் ரத்நாயக்க அவர்களைத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 2447167.

ரஞ்ஜித்த எஸ். மஹநாம,
சமாதான நீதவான் (அகில இலங்கை),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
உத்தரவுபெற்ற ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்ரைவ்,
இல. 474, பிட்டகோட்டே.

8-905/ 1

---

**மக்கள் வங்கி-யூனியன் பிளேஸ் கிளை**

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க
மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின்கீழ் விற்பனை
அறிவித்தல்

**மேல் மாகாணம், கொழும்பு மாநகர சபை மற்றும் மாவட்டத்தினுள் வட்டாரத்தினுள் வட்டார இல. 23, ஹுணுப்பிட்டியில் யூனியன் பிளேஸ், கொம்பனித்தெரு வீதியில், முன்னர் வரிமதிப்பீட்டிலக்கம் 434 (பகுதி), தற்போது வரிமதிப்பீட்டிலக்கம் 299, யூனியன் பிளேஸ் எனக் கொண்டு அமைந்துள்ள அதிலுள்ள கட்டிடங்களுடனான காணித்துண்டு ஏலவிற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் :**
**ஒரு றூட் பத்து பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 10பே.))**

மக்கள் வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் மேற்படி சொத்தை அதே இடத்தில் 10.09.2006 ஆந் திகதி மு. ப. 11.00 மணியிலிருந்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2005.08.12 ஆந் திகதிய அரச வர்த்தமானியையும், 2005.08.04 ஆந் திகதிய “தினமின”, “டெயிலி நியூஸ்” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- ஏலத்தின் இறுதியில், சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூராட்சி சபைகளுக்குச் செலுத்தப்படவேண்டிய உள்ளூராட்சி வரியாக 1% ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) இலிகிதர் கூவுவோர் கட்டணமாக ரூபா 500 ;
(5) மொத்த விற்பனைச் செலவும் ஏனைய அறவீடுகள் ஏதுமிருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90%, “கொழும்பு 01, டியூக் வீதி, இல. 11, வலயத் தலைமையகம் (மேற்கு வலயம்), மக்கள் வங்கி, உதவிப் பொது முகாமையாளரிடம் (மேற்கு வலயம் 1)” இடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 2387068, பெக்ஸ் இல. : 2435977.

காணி உறுதி மற்றும் ஏனைய விபரங்களை மேலே கூறப்பட்ட முகவரியில் பெறலாம்.

மேலே குறிப்பிட்டவாறு, 30 நாட்களுக்குள் சொல்லப்பட்ட தொகை செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% ஐப் பறிமுதல்செய்து, சொத்தை மீளவும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ரஞ்சித் எஸ். மஹாநாம (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்,
அனுமதிபெற்ற ஏலதாரர்.

ஆர். எஸ். எம். ஒக்ஷன்ஸ்,
மஹநாம ட்ரைவ்,
474, பிட்டகோட்டே,
கோட்டே.
தொலைபேசி இலக்கம் : 2863121.

8-905/ 2

---

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2006 இன் இல. 235

டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2288.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61084 கப்ரின் (தற்காலிக மேஜர்) பிந்து ஹேவா சிந்தக்க சமிந்த த சில்வா, கவீப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/61084 கப்ரின் மேஜர் பிந்து ஹேவா சிந்தக்க சமிந்த த சில்வா, கவீப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.21.

8-845

---

2006 இன் இல. 236

டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2274.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
பதவி நிரந்தரமாக்குதல், இளைப்பாறுதல், இலங்கைத் தரைப்
படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**பதவி நிரந்தரமாக்குதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 07 ஆந் திகதியிலிருந்து மேஜர் பதவியில் நிரந்தரமாக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/63783 கப்ரின் (தற்காலிக மேஜர்) ரணதுங்க முதியன்சேலாகே காமினீ ரணதுங்க, இபீப

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 08 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/63783 மேஜர் ரணதுங்க முதியன்சேலாகே காமினீ ரணதுங்க, இபீப

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 08 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/63783 மேஜர் ரணதுங்க முதியன்சேலாகே காமினி ரணதுங்க, இபீப.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.18.

8-844

---

2006 இன் இல. 237

டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2286.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல்

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து வைத்திய காரணிகள் மீது இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62870 கப்ரின் தனுஷ்க தனசிரி மல்லியாவடு, கவீப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.18.

8-843

---

2006 இன் இல. 238

டீஆர்எவ்/ 21/ ஆர்ஈசீரீ/ 2270.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட
இளைப்பாறுதல், இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது)
உப சேவைக்கு மாற்றம் செய்தல்

**இளைப்பாறுதல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62387 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) ரத்நாயக்க முதியன்சேலாகே ரத்னபால, இமிஇபொ

**இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது) உப சேவைக்கு மாற்றம் செய்தல்**

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தர (பொது)

உப சேவைக்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/62387 கப்ரின் (உபகரணங்கள் கட்டுப்பாட்டாளர்) ரத்நாயக்க முதியன்சேலாகே ரத்னபால, இமிஇபொ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.18.
8-847

---

2006 இன் இல. 239

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/495.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக ரெஜிமென்ட்ஸ் மாற்றங்கள்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர்கள் 2003, சனவரி மாதம் 22 ஆந் திகதியிலிருந்து இலங்கை தரைப் படை மகளிர் படையணியிலிருந்து இலங்கைத் தரைப்படை பொது சேவை படையணிக்கு மாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

(அ) உ/ 64649 தற்காலிக கப்ரின் அசலா சுலாரி யாப்பா அபேவர்தன, இஇமப
(ஆ) உ/64653 தற்காலிக கப்ரின் வாஹல தந்திரிகே அனுராதா சமன்மலீ பெரேரா, இஇமப
(இ) உ/64652 தற்காலிக கப்ரின் குரன பட்டபந்திகே இந்திகா சஞ்ஜீவனி பெரேரா, இஇமப
(ஈ) உ/64651 தற்காலிக கப்ரின் அருமாதுரகே ரஜித்தா சுரங்கி த சில்வா, இஇமப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.21.
8-848/ 3

---

2006 இன் இல. 240

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/495.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக பிரிவு மாற்றங்கள்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து கமாண்டோ ரெஜிமென்ட் இடமிருந்து அவருடைய பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள ரெஜிமேன்ட் இடம் மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

தற்காலிக கப்ரின் அமரசிங்க ஆரச்சிகே சத்த மங்கள அமரசிங்க, ஆர்எஸ்பீ கரெ - கஜபா காற்படை ரெஜிமேன்ட்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.09.
8-848/ 1

---

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2272.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல்*

இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையின் பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2005, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து அதிகாரவாணையிலிருந்து அகற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 84353 லெப்டினன்ட் அலகி ஹேவகே மகேந்திர பிரதீப், இஇபொவீப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.18.
8-842

---

2006 இன் இல. 241

டீஆர்எவ்/ஆர்ஈசீரீ/495.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக ஒன்றிய மாற்றங்கள்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து இலங்கை பீரங்கிப் படை ரெஜிமென்ட் இடமிருந்து அவருடைய பெயரின் முன்னே குறிப்பிட்டுள்ள ரெஜிமேன்ட்டிற்கு மாற்றம் செய்தல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

லெப்டினன்ட் கலுதந்திரிபட்டபந்திகே ருக்மன் பண்டுக த சில்வா - இலங்கைத் தரைப்படை பொது சேவா படையணி ரெஜிமேன்ட்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.21.
8-848/ 2

---

2006 இன் இல. 242

டீஆர்எவ்/21/ஆர்ஈசீரீ/2290.

**இலங்கைத் தரைப்படை - நிரந்தரப் படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறுதல்*

பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் 2006, பெப்புருவரி மாதம் 13 ஆந் திகதியிலிருந்து இலங்கைத் தரைப்படையின் நிரந்தரப் படையிலிருந்து இளைப்பாறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது :-

உ/ 64152 லெப்டினன்ட் ஜயவர்தன முதியன்சேலாகே கருணா பண்டார, கரெ

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006.02.21.
8-846

---

2006 இன் இல. 243

டீவீஎவ்/ஆர்ஈசீரீ/34/ஏவை.

**இலங்கை தரைப்படை தொண்டர்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்கள்ல் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், உள்ளடக்குதலும்*

பின்வரும் பெயருடையோர் 2005 ஓகத்து மாதம் 22 ஆந் திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ள சிரேட்டதன்மையின் பிரகாரம் இலங்கை தரைப்படை தொண்டர் படையணியின் கப்ரின் பதவியிலிருந்து அதிகாரவாணைக்கு நியமனம் செய்தலும், அத்திகதியிலிருந்து குறிப்பிட்டுள்ள ரெஜிமென்ட் /படையணிகளிடம் உள்ளடக்குதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

(அ) மெரகல்கெதர அனுர விஸ்வஜித் தரநிதர சேனாநாயக்க - 2 ஆம் இலங்கை வைத்திய படையணி (தொண்டர்)
(ஆ) திலிப் ஹிக்கடுவே லியனகே 2 ஆம் இலங்கை வைத்திய படையணி (தொண்டர்)
(இ) தொன் சிந்தக்க பண்டாரிகொட - 4 ஆம் பொறியியல் சேவை ரெஜிமென்ட் (தொண்டர்)
(ஈ) அர்ஜுன நயனஜித் விஜேசேக்கர - 2 ஆம் இலங்கை சைகை படையணி (தொண்டர்)
(உ) வர்ணதர சிந்தக்க கமகே- 4 ஆம் பொறியியல் சேவை ரெஜிமென்ட் (தொண்டர்).

அதியுத்தமனாரின் ஆணைப்படி,
கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு.

கொழும்பு,
2006. 03. 09 ஆந் திகதி,
8-809

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**யாத்திரிகை விதிமுறை**

*சித்தாண்டி சித்திர வேலாயுத சுவாமி ஆலய திருவிழா - 2006*

இவ்வாலய திருவிழாவிற்குச் சமுகம் கொடுக்கும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் அறிவிப்பது யாதெனில்.

மேற்படி ஆலயத் திருவிழா 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23 ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 2006 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 7 ஆந் திகதி முடிவடையும். ஆதலால் அதில் பங்குபற்றும் யாத்திரிகர்களுக்கும் மற்றும் அதில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் 1948 ஜுலை மாதம் 16 ஆந் திகதிய 9886 இலக்கத்தைக்கொண்ட அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள விதிகள் ஆலயத்திருவிழா முடிவடையும் வரை அமுலில் இருக்கும் என்பதை இதனால் அறியத்தருகின்றேன்.

எஸ். பாஸ்கரன்,
பிரதேச செயலாளர்,
ஏறாவூர்ப்பற்று.

டிஎஸ்/ஈபி/எச்/கோயில்/34ஆ,
பிரதேச செயலகம்,
ஏறாவூர்ப்பற்று,
செங்கலடி
1.08.2006.
8-794

---

**2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரிச் சட்டமூலம்**

*34 (2) (அ) பிரிவின் கீழான அறிவித்தல்*

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உள்நாட்டு இறைவரி சட்டமூலத்தின் 34(2) (அ) பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் இங்கு கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நிதியத்தை அப்பிரிவின் நோக்கங்களுக்காக அனுமதிக்கப்பட்ட அறக்கொடை நிறுவனமாக இத்தால் அறிவிக்கின்றேன்.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு 01.
2006.08.08.

**அட்டவணை**

"செயா மன்றம்"

8-943

---

# வரவு செலவுத் திரட்டுக்கள்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

*2001, திசெம்பரில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானச் செலவுக் கணக்கு*

| *முன்னைய ஆண்டு* | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **1. வருமானம்** | | | | | |
| 200,000,000.00 | 01. | *அரசாங்க மானியம்* | (அ) | மீண்டுவரும் | 231,800,000.00 | |
| | | | | ஆணைக்குழு | 9,000,000.00 | |
| 1,500,000.00 | | | | ஜெல்ட் | 1,300,000.00 | 242,100,000.00 |
| 25,636,200.00 | | | (ஆ) | கல்வி உதவிப் பணம் | | 35,335,300.00 |
| | | | (இ) | மகாபொல புலமைப்பரிசில் | | |
| 4,183,450.00 | | | | (i) திறைசேரிக் கூறு | | 4,117,750.00 |
| 11,351,200.00 | | | | (ii) நம்பிக்கை நிதியம் கூறு | | 10,393,950.00 |
| | | | (ஈ) | அறக்கொடை புலமைப் பரிசில் | | |
| 104,800.00 | | | | (i) திறைசேரிக் கூறு | | |
| 11,873.92 | 02. | முதலீடுகளிலிருந்து வட்டி | | | | 5,626.50 |
| 1,190,052.89 | 03. | கடன்களிலிருந்து வட்டி | | | | 1,234,164.96 |
| 334,950.00 | 04. | ஆதனங்களிலிருந்து வாடகை | | | | 409,171.80 |
| 38,339.25 | 05 | பழைய இருப்புப் பொருள் விற்பனை | | | | 91,017.00 |
| 37,813.00 | 06. | உற்பத்திப் பொருட்களின் விற்பனை | | | | 25,323.50 |
| 2,156,088.35 | 07. | நானாவிதப் பெறுகைகள் | | | | 2,220,898.26 |
| 609,575.00 | 08. | பதிவுக் கட்டணங்கள் | | | | |
| | | | | பட்டதாரி மாணவர் | 602,610.00 | |
| | | | | பட்டபின் மாணவர் | 111,300.00 | 713,910.00 |
| 736,675.00 | 09. | போதனைக் கட்டணங்கள்- | | பட்டப்பின் மாணவர் | | 713,125.00 |
| 116,200.00 | 10. | தேர்வுக் கட்டணங்கள் | | | | |
| | | | | பட்டதாரி மாணவர் | 116,775.00 | |
| | | | | பட்டபின் மாணவர் | 60,665.00 | 177,440.00 |
| 82,213.50 | 11. | பிரசுரங்களின் விற்பனை | | | | 21,538.00 |
| 4,972.00 | 12. | நூலகக் குற்றப்பணம் | | | | 6,393.00 |
| 306,675.00 | 13. | மருத்துவக் கட்டணங்கள் | | | | 360,600.00 |
| 39,881.50 | 14. | பெறப்பட்ட கழிவுகள் | | | | 196,073.53 |
| 337,710.55 | 15. | இதர செயற்பாடுகளிலிருந்து வருமானம் | | | | 136,358.53 |
| 198,800.00 | 16. | புறநிலைப் படிப்புக்கள் அலகு | | | | 192,600.00 |
| 21,150.00 | 17. | தொழிலாளர் கல்வி | | | | 13,225.00 |
| 5,027.85 | 18. | நாணயத் தொலைபேசி | | | | |
| 1,269,536.33 | 19. | வெளிநிலைத் தேர்வு | | பெறுகைகள் | 2,238,065.00 | |
| | | | | கொடுப்பனவுகள் | 1,014,645.94 | 1,223,419.06 |
| 87,265.51 | 20. | அச்சிடல் அலகு | | பெறுகைகள் | 405,175.00 | |
| | | | | கொடுப்பனவுகள் | 310,875.00 | 94,300.00 |
| 250,360,449.65 | | | | **மொத்த வருமானம்** | | 299,782,184.14 |
| | II. | *கழி* செலவினங்கள் | | | | |
| 30,000,143.45 | 01. | பொது நிர்வாகமும் பதவியணிச் சேவைகளும் | | | 37,139,772.58 | 47,758,747.59 |
| | | | (i) | தேய்மானம் | 52,674,145.44 | |
| 6,326,288.00 | | | (ii) | பணிக்கொடைக்கான ஒதுக்கம் | 15,472,654.23 | 105,286,572.25 |
| 142,068,408.54 | 02. | கல்விச் சேவைகள் | | | | 177,579,411.68 |
| 47,651,191.33 | 03. | நலச் சேவைகள் | | | | 56,225,805.24 |
| 5,014,671.73 | 04. | காணிகள், கட்டடங்களின் பராமரிப்பு | | | | 5,941,059.85 |
| | 05. | ஆராய்ச்சியும் பிரசுரங்களும் | | | | |
| | 06. | பட்டப்பின் படிப்புகள் | | | | |
| 1,330,992.30 | 07. | விரிவாக்க நடவடிக்கைகள் | | | | 1,439,705.42 |
| 1,048,846.90 | 08. | துணை நடவடிக்கைகள் | | | | 1,555,920.60 |
| 8,660,302.74 | 09. | நூலக சேவைகள் | | | | 10,946,367.48 |
| 878,243.33 | 10. | ஜெல்ற் நிகழ்ச்சித்திட்டம் | | | | |
| 290,737,835.91 | | **மொத்தச் செலவினங்கள்** | | | | 358,974,842.52 |
| (40,377,386.26) | | ஆண்டுக்கான செலவினம்/வருமான மிகை | | | | (59,192,658.38) |

**வருமான, செலவின பங்கீட்டுக் கணக்கு**

| முன்னைய ஆண்டு | | | | |
|---|---|---|---|---|
| | **1. வருமானம்** | | | |
| 40,377,386.26 | | | | |
| 136,222,833.02 | செலவின/வருமான மிகை (குறை) | | | (59,192,658.38) |
| | சென்ற ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட மீதி | | (254,544,735.19) | |
| | கூட்டு : திறைசேரி வைப்பு கணக்கிலிருந்து மாற்று | | (52,170,749.98) | |
| | | | (306,715,485.17) | |
| (1,251,409.50) | முன்னைய ஆண்டின் சீராக்கல்கள் | | | |
| | பெறுகைகள் | 170,441.99 | | |
| | கொடுப்பனவுகள் | 59,278.10 | 111,163.89 | (306,604,321.28) |
| (177,851,628.78) | பகிரவேண்டிய தொகை | | | (365,796,979.66) |
| 1,891,293.00 | மாற்றப்பட்டது : ஆங்கில மொழி கற்பித்தல் நிலையம் | | 1,300,000.00 | |
| | வெளிநிலைத் தேர்வுகள் | | 1,223,419.06 | 2,523,419.06 |
| 818,085.27 | பதிவழித்தலும் இதர சீராக்கல்களும் | | | 241,139.89 |
| (180,561,007.05) | மீதி முன் கொண்டு செல்லப்பட்டது/ஐந்தொகை | | | (368,561,538.61) |

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

கையொப்பமிட்டது:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,
கணக்கீட்டு அலுவலர்,
துணைவேந்தர்.

கையொப்பமிட்டது:
வெ. காந்தமூர்த்தி,
நிதியாளருக்காக.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை**
**2001 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஐந்தொகை**

| முன்னைய ஆண்டின் இறுதியில் மீதி | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **01.** | **மூலதனம்:** | | | | |
| 658,926,065.52 | (அ) | செலவிடப்பட்ட மூலதன நன்கொடை | | | 797,747,057.66 | |
| 94,822,182.02 | (ஆ) | செலவிடப்படாத மூலதன நன்கொடை | | | 1,288,250.73 | |
| 16,888,589.46 | (இ) | வருமானம், கொடை பொதுக் காப்பொதுக்கத்திலிருந்து மூலதன செலவிற்கு உதவுதொகை | | | 17,807,089.46 | |
| 16,843,764.54 | (ஈ) | இதர நிறுவனங்களிலிருந்து பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களிற்கு உதவுதொகை | | | 16,843,764.54 | |
| 398,960.00 | (உ) | கணனி அபிவிருத்திக்கு செலவிடப்பட்ட ஒதுக்கம் | | | 398,960.00 | 834,085,122.39 |
| 787,879,561.54 | | | | | | |
| | **02.** | **ஒதுக்கங்கள்:** | | | | |
| (254,544,735,019) | (அ) | பொது ஒதுக்கம் | | | | (368,561,538.61) |
| | (ஆ) | பொது ஒதுக்கமும் பிணைக் கடைப்பாடும் | | | | |
| 7,890,743.90 | I. | பெறப்பட்டவை | | 10,967,693.91 | | |
| 73,781,217.19 | II. | பெறப்பட வேண்டியவை | | 79,888,486.40 | 90,856,180.31 | |
| 4,558,714.60 | III. | பெறப்பட்ட வட்டி | | | 5,321,969.97 | |
| ( 168,314,059.50) | | | | | | 96,178,150.28 |
| 57,860.00 | (இ) | மூலதன ஒதுக்கம் | | | | 57,860.00 |
| | **03.** | **மட்டுப்படுத்தப்பட்ட நிதியங்களும் குறிப்பான ஒதுக்கமும்:** | | | | |
| 33,793,025.10 | அ. | அறக்கொடை நிதியம் | | 37,087,407.64 | | |
| 462,974.91 | ஆ. | சிறப்பு நன்கொடை | | 378,624.91 | | |
| 179,596.78 | இ. | ஆராய்ச்சி நன்கொடை | | 253,596.78 | | |
| 9,471,779.74 | ஈ. | கொடைகளும் நன்கொடைகளும் | | 16,404,831.04 | | |
| 2,805,943.88 | உ. | துணைவேந்தர் நல நிதியம் | | 2,065,397.64 | | |
| | | வளாகத் தலைவர் நிதியம் | | 25,620.00 | | |
| 105,528.41 | ஊ. | கணனி அபிவிருத்தி ஒதுக்கம் | | 105,528.41 | | |
| 727,295.36 | எ. | உயிர் இரசாயனவியல் விரிவாக்க கற்கைநெறி நிதியம் | | 727,295.36 | | |
| 220,000.00 | ஏ. | பதவி நிலை அலுவலருக்கான கணனிக் கல்வி | | 220,000.00 | | |
| 5,049,337.53 | ஐ. | வெளிநிலைத் தேர்வுகளிலிருந்து வருமானம் | | | | |
| | | செலவிடப்பட்டது. | 5,627,005.00 | | | |
| | | செலவிடப்படாதது | 645,751.59 | 6,272,756.59 | | |
| | ஒ. | ஆங்கில மொழி கற்பித்தல் நிலையம் | | | | |
| | | செலவிடப்பட்டது. | 90,337.50 | | | |
| | | செலவிடப்படாதது | 2,346,494.25 | 2,436,831.75 | | |
| 50,975.00 | ஓ. | முகாமைத்துவபீட அபிவிருத்தி நன்கொடை | | 50,975.00 | | |
| 54,395,042.50 | ஔ. | பணிக்கொடைக்கான ஏற்பாடு | | 68,101,462.98 | 134,130,328.1 | |
| | | **சுய நெறியீட்டல் கற்கை நெறிகளின் மீதி** | | | | |
| 217,918.60 | I. | உடற் கல்வியியல் திப்ளோமா | | 433,031.31 | | |
| 445,674.12 | II. | மீன் வள அபிவிருத்தி நிலையம் | | 384,810.38 | | |
| 301,892.45 | III. | பொது நிர்வாகத்தின் பட்டப்பின் திப்ளோமா | | 544,548.60 | | |
| (46,865.29) | IV. | உயிர் இரசாயனவியல் முதுவிஞ்ஞானமாணி கற்கைநெறி | | 14,421.87 | | |
| 889,500.00 | V. | கல்வி முதுமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டம் | | 1,755,109.00 | | |
| 134,312.35 | VI. | ஆங்கிலத்தில் சான்றிதழ் கற்கை நெறி | | 219,472.09 | | |
| 44,955.92 | VII. | கணனிப் பிரயோகத்தில் சான்றிதழ் கற்கை நெறி | | 40,961.42 | | |
| | VIII. | சுகாதார படிப்புகள் அலகு | | 1,090,017.75 | 4,482,372.42 | 138,612,700.52 |
| 109,248,887.36 | | | | | | |
| 13,178,729.19 | **04.** | **மூலதனப் பெறுகைகள்** | | | | 11,178,729.19 |
| 742,050,978.59 | | | | | | 711,551,023.77 |
| | **06.** | **நிலையான சொத்துக்கள்** | கொள்விலைகள் | தேய்மானத்திற்கான ஒதுக்கம் | தேறிய பெறுமதி | |
| 78,047,720.56 | அ. | காணிகளும் கட்டிடங்களும் | 105,805,521.53 | 20.385,783.22 | 85,419,738.31 | |
| 2,900,532.61 | ஆ. | ஓரளவு நிரந்தர கட்டிடங்கள் | 7,215,431.56 | 4,675,670.53 | 2,539,761.03 | |
| 81,820,467.54 | இ. | அலுவலகத் தளபாடமும் சாதனமும் | 216,756,906.43 | 124,392,288.71 | 92,364,617.72 | |
| 21,889,384.84 | ஈ. | நூலக நூல்களும் பருவ இதழ்களும் | 102,197,541.79 | 75,723,105.20 | 26,474,436.59 | |
| 1,485,821.08 | உ. | மோட்டார் வாகனங்கள் | 6,858,114.75 | 6,453,916.62 | 404,198.13 | |
| 101,644.43 | ஊ. | அங்கிகள் | 1,839,465.50 | 1,839,465.50 | - | |
| 226,705.97 | எ. | தொலைபேசி மாற்று | 1,283,571.96 | 1,070,204.30 | 213,367.66 | |
| 1,366,136.67 | ஏ. | இயந்திரமும் பொறித் தொகுதியும் | 2,034,010.00 | 891,098.33 | 1,142,911.67 | |
| 104,200.00 | ஐ. | கால்நடை | 104,200.00 | - | 104,200.00 | |
| | | | 444,094,763.52 | 235,431,532.41 | | 208,663,231.11 |
| | **07.** | **முதலீடு** | | | | |
| 28,113,518.57 | அ. | அறக்கொடை நிதிய முதலீடு | | | 29,907,443.80 | |
| 285,582.00 | ஆ. | பிணை வைப்பு | | | 312,872.00 | |
| 11,343,037.78 | இ. | சில்லறை முதலீடு | | | 14,924,440.64 | |
| 1,716,118.95 | ஈ. | துணைவேந்தர் நலநிதிய முதலீடு | | | 1,717,690.54 | |
| 41,458,257.30 | | | | | | 46,862,446 .98 |
| 142,676,184.68 | **08.** | **நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலை** | | | | 144,258,796.53 |
| | **09.** | **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | |
| | அ. I. | *இருப்புப் பொருள் முற்பணம்* | | | | |
| 6,684,451.60 | i. | யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் | 4,949,820.05 | | | |
| 287,865.59 | ii. | வவுனியா வளாகம் | 466,970.88 | | 5,416,790.93 | |
| | II. | *துறைகளிலுள்ள இருப்புப் பொருள்* | | | | |
| 7,170,912.00 | i. | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | | 7,758,434.33 | | |
| 754,019.33 | ii. | வவுனியா வளாகம் | | 807,036.53 | | |
| 41,795.25 | III. | இருப்புப்பொருள் முற்பணக் கணக்கு செயற்பாடு விவசாய பீடம் | | 41,795.25 | | |
| 8,060.00 | IV. | ஆங்கில ஆவணங்கள் - வவுனியா வளாகம் | | 7,570.00 | | |
| | | | | | 8,614,836.11 | |
| | ஆ. | *சில்லறைக் கடன் பெற்றோர்* | | | | |
| 73,781,217.19 | I. | பிணைக்கடைப்பாடு | | 79,888,486.40 | | |
| 3,380,103.87 | II. | ஏனையவை | | 2,338,896.40 | | |
| | | | | | 82,227,382.80 | |
| 33,188,818.58 | இ. | பதவியினரின் கடன்களும் முற்பணங்களும் | | 32,586,881.07 | | |
| 80,334.50 | ஈ. | மாணவர் கடன்களும் முற்பணங்களும் | | 76,234.50 | | |
| 17,773,889.38 | உ. | வழங்கல்களுக்கும் சேவைகளுக்கும் முற்பணம் | | 26,586,078.30 | | |
| 88,904,453.33 | ஊ. | கட்டடங்களிற்கான முற்பணம் | | 150,666,265.83 | | |
| 137,233,689.13 | எ. | திறைசேரி வைப்புக் கணக்கு | | | | |
| 8,032,050.87 | ஏ. | காசுப்புத்தக மீதி | | 13,456,427.27 | | |
| 12,761.00 | ஐ. | சிறு காசு முற்பணம் | | 13,279.50 | | |
| 15,067,870.83 | ஒ. | இறக்குமதி முற்பணம் | | 18,371,874.07 | | |
| 4,000,349.22 | ஓ. | ஏனையவை | | 3,589,288.97 | 245,346,329.51 | 341,605,339.35 |
| 396,402,641.67 | | | | | 741,389,813.97 | |
| 768,479,697.35 | | | | | | |
| | | ***கழி : நடைமுறைப்பொறுப்புக்கள்*** | | | | |
| 2,459,556.94 | அ. | வைப்புக்கள் | | 2,372,186.60 | | |
| 4,597,824.55 | ஆ. | சில்லறைக் கடன் கொடுத்தோர் | | 2,996,082.90 | | |
| 2,211,775.04 | இ. | அட்டுறு செலவுகள் | | 2,243,547.12 | | |
| 1,102,187.53 | ஈ. | நிலுவையிலுள்ள வேதனங்கள் | | 1,598,763.18 | | |
| 4,821.40 | உ. | இரத்து செய்யப்பட்ட காசோலைகள் | | 4,900.00 | | |
| 16,052,553.30 | ஊ. | ஏனையவை | | 20,623,310.40 | | |
| 26,428,718.76 | | | | | | 29,838,790.20 |
| 742,050,978.59 | | | | | | 711,551,023.77 |

சரியென உறுதி செய்யப்பட்டது.

கையொப்பமிட்டது:
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
கணக்கீட்டு அலுவலர்
துணைவேந்தர்.

கையொப்பமிட்டது:
வெ. காந்தமூர்த்தி
நிதியாளருக்காக.

உப வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2001, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2001, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகளின் கணக்காய்வானது 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) மற்றும் 111 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) (4) மற்றும் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளைப் பின்தொடர்ந்து எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(2) ஆம் பிரிவிற்கிணங்க இந்த அறிக்கை வழங்கப்படுகின்றது. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை பல்கலைக்கழக உபவேந்தருக்கு 2002, நவெம்பர் 21 ஆந் திகதி அனுப்பப்பட்டது.

1.2. ***கணக்காய்வின் நோக்கெல்லை.***-இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் யாவும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் சாத்தியமான விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறள் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்கள், முறைகள், நடைமுறைகள் என்பவற்றிற்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக் கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, கணக்கீட்டுத் தத்துவங்களினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக் கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புகள், அவற்றின் ஒட்டு மொத்த வெளிப்படுத்தல்களின் மதிப்பீடு, பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் பொருத்தமானதாகவும் மாற்றமின்றிப்பிரயோகித்தும் போதியளவில் வெளிப்படத்தப்பட்டும் காணப்பட்டதா என்பதனை நிர்ணயித்தல் போன்றவற்றினை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

**2. கணக்குகள்**

2.1. ***கணக்காய்வு அபிப்பிராயம்***- இந்த அறிக்கையின் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களிலிருந்து எழும் சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்களானவை 2001, திசெம்பர் 31 இலுள்ள பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டின் விளைவுகளையும் காசோட்டத்தையும் அனைத்துப் பொருண்மையான அம்சங்களையும் நியாயபூர்வமாக வெளிப்படுத்தக்கூடியவாறு இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட நியமங்களைத் தவிர இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கும் நிதிக் கூற்றுக்களின் குறிப்புகளில் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கும் இணங்க திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 ***நிதிசார் விளைவுகள்.***- சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி, 2001, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பல்கலைக்கழகத்தின் செயற்பாடு, மீண்டுவரம் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுப்பதற்கு முன்னர் ரூபா 301,292,658 ஆன ஒரு பற்றாக்குறையை விளைவித்திருந்ததுடன் மீளாய்வாண்டுக்கு பல்கலைக்கழகத்தின் மீண்டுவரும் செலவிற்காக கிடைத்த ரூபா 242,100.000 அரசாங்க மானியத்தின் பின்னர் இந்தப் பற்றாக்குறை ரூபா 59,192,658 ஆகக்குறைவடைந்திருந்ததை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீண்டுவரும் செலவிற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னரான நேரொத்த பற்றாக்குறையான ரூபா 241,877,386 மீண்டுவரும் செலவிற்கான ரூபா 201,500,000 ஆன அரசாங்க மானியத்தினால் ரூபா 40,377,386 ஆகக் குறைக்கப்பட்டிருந்தது.

***2.3. கணக்குகள் மீதான கருத்துரைகள்***

*2.3.1. கணக்கீட்டுக் கொள்கைகள்.-*

(அ) பாடக் கட்டணங்களிலிருந்தான (பட்டப்பின்படிப்பு) வருமானம் அட்டுறு அடிப்படைக்குப் பதிலாக காசு அடிப்படையில் கணக்கிற்குக் கொண்டு வரப்பட்டது.

(ஆ) களஞ்சியப் பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் ஏற்றியிறக்கலில் செலவிட்ட உள்வந்த வண்டிக்கூலி களஞ்சியத்தினதும் மூலதனச் சொத்துக்களினதும் பெறுமதியுடன் கூட்டுவதற்குப் பதிலாக நேரடியாக வருமானச் செலவுக் கணக்கிற்குத் தாக்கல் செய்யப்பட்டது.

(இ) பிணை முறிக் கடப்பாடுகள், நன்கொடை நிதியம், நானாவித முதலீடுகள் முதலியன தொடர்பான நிலையான வைப்புக்களில் சேர்ந்த வட்டி, மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடையும் திகதி வரை மட்டுமே கணக்கிற்குக் கொண்ட வரப்பட்டதுடன் அட்டுறு அடிப்படையில் நிதி வருடம் முடிவு வரை கொண்டு வரப்படவில்லை.

(ஈ) நடப்பாண்டுக்கும் தொடர்ந்துவரும் ஆண்டுகளுக்குமாக சஞ்சிகைகள், குறிப்பேடுகள், அறிக்கைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய சந்தா புதுப்பித்தலுக்காக மீளாய்வாண்டில் செய்த கொடுப்பனவு கணக்கீட்டு வருடத்தையும் மீளாய்வாண்டில் வழங்கல்கள் செய்யப்பட்டதா என்பதையும் கருத்திற் கொள்ளாது புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளுக்கு தாக்கல் செய்யப்பட்டது.

*2.3.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்.-*

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) நேரடியான வங்கி வரவுகளும் செலவுகளுமான முறையே ரூபா 34,082 மற்றும் ரூபா 3,920,000. தொகைகள், இனங்காணப்பட்டுக் கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஆ) ரூபா 108,523 பெறுமதி கொண்ட ஸ்ரெப்லர் அகற்றி, ஸ்ரெப்லர் இயந்திரம், துளையிடும் கருவி (4 துளைகள்), அலுவலக தட்டுக்கள், எவர் சில்வர் தம்ளர்கள், வாளிகள், தெளிகருவி, கத்தரிக் கோல்கள், ஆமைப் பூட்டுக்கள் போன்றவை களஞ்சிய முற்பணக் கணக்கில் உட்படுத்தப்பட்டது.

(இ) புலமைப்பரிசில் பெற்று வெளிநாட்டுக்குச் சென்ற பல்கலைக்கழக ஆசிரியர்களிடமிருந்து உடன்படிக்கை முறிகளை மீறிய வகையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 8,711,584 தொகை கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஈ) பல்கலைக்கழகத்துடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக சேவையை விட்டு தமது விருப்பில் வெளியேறுவதற்கு வேண்டிய மூன்று கலண்டர் மாத அறிவித்தல் கொடுக்காதவர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய மூன்று மாதச் சம்பளங்கள் தீர்மானிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(உ) ரூபா 2,755,100 மொத்தத் தொகையான 1995/96 ஆம் ஆண்டுகளுக்கான சம்பள நிலுவைகள் 2001 ஆம் ஆண்டின் போது கொடுக்கப்பட்டதுடன் இக் கொடுப்பனவுக்கு அவசியமான மீளளிப்பு திறைசேரியால் செய்யப்படவில்லை. ஆனால், ஏனைய நிதி மூலங்களிலிருந்து கொடுக்கப்பட்டிருந்தது.

(ஊ) பின்வரும் நன்கொடையாகக் கிடைத்த விடயங்கள் பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

| | விடயம் | நன்கொடை கொடுத்த நாடு | திகதி |
|---|---|---|---|
| (அ) | சமஸ்கிருத தட்டெழுத்து இயந்திரம் | இந்திய உயர்ஸ்தானிகர் | 2000.09.09 |
| (ஆ) | கணனி, அச்சிடு கருவி, கோட் மற்றும் சீசெற் புறொஜக்ரருடன் கூடிய யூபிஎஸ் மற்றும் ஸ்கனர் | உலக சுகாதார நிறுவனம், ஜெனிவா | 2000.03.31 |
| (இ) | ரூபா 10,000,000 பெறுமதியான சிறிய பேரூந்து, கணனி ஆய்வுகூட மற்றும் கற்பித்தல் உபகரணங்கள் | பிறிட்டிஷ் கவுன்சில் | 1995 |

(எ) ஐந்தொகையில் காட்டப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி புத்தக மீதிகளைப் பிரதிபலித்ததுடன் ஆண்டு முடிவிலுள்ள உருப்படி சரிபார்த்த மீதிகளில் இருக்கவில்லை.

(ஏ) 4 கொள்கலன்களில் அனுப்பப்பட்ட ரூபா 46,080 பெறுமதியான புத்தகங்கள் பல்கலைக்கழகத்துக்கு கிடைக்காததுடன் சபையின் அனுமதியின்றி பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 1997/1998 ஆம் கணக்கீட்டு ஆண்டுகளுக்கான ரூபா 2,132,238 மொத்தத் தொகை கொண்ட சம்பளம், ஊக்குவிப்புப்படி மற்றும் மேலதிக நேர நிலுவைகள் மீளாய்வாண்டிற்கான ஒரு செலவாகக் கருதப்பட்டிருந்தது.

(ஒ) இராணுவ நடவடிக்கைகளினாலும் அலுவலக இடப் பெயர்வினாலும் விவசாய பீடத்துக்கு ஏற்பட்ட இழப்புக்கள் தீர்மானிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(ஓ) வாகனத் தரிப்பிடம், நூலகம்,- கட்டம் I இன் 1 ஆம், 2 ஆம் நிலை மூன்று தொகுதி மாணவர் விடுதி, கேட்போர் கூடம் II ஆம், III ஆம் நிலை ஆகிய நிருமாண வேலைகள் நிறைவு செய்யப்பட்டு, பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் நிருமாணக் கிரயம் கட்டிடத் திணைக்களத்துக்கு செலுத்திய ரூபா 75,793,000 மொத்தத் தொகையான முற்பணங்களாக இதுவரை கருதப்படுகின்றது.

(ஔ) பெரும்பாலான வீதி வேலைகள், நிறைவு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்தினால் பயன்படுத்துகின்ற போதிலும் அதிகார சபைக்குக் கொடுத்த ரூபா 1,141,207 முற்பணம் வீதி அதிகார சபைக்கான முற்பணமாக கணக்குகளில் காட்டப்பட்டது.

(ஃ) காணியின் பெறுமதியை தனியாக இனங்காணாது காணிகளுக்கும் கட்டிடங்களுக்குமாக பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(க) சொத்துக்களின் இயல்பையும் திரவத்தன்மையையும் கருத்திற்கொண்டு கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் பெறுமதி காட்டப்படவில்லை. எடுத்துக் காட்டாக, நூலகப் புத்தகங்களும் பருவ வெளியீடுகளும் ஐந்தொகையில் நிலையான சொத்துக்களின் கீழ் மோட்டார் வாகனங்கள் மற்றும் இயந்திரமும் பொறித்தொகுதிக்கும் முன்னர் காட்டப்பட்டிருந்தது.

(கா) ரூபா 1,600,000 தொகையான காசு, வீடு மற்றும் காணியின் நன்கொடை கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(கி) கொழும்பு களஞ்சியத்திலுள்ள இருப்பின் பெறுமதி நிச்சயிக்கப்பட்டு கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை. பதிலாக, அது வழங்கலுக்கான முற்பணமாகக் கருதப்பட்டது.

(கீ) உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து சமூக உள சுகாதார நிகழ்ச்சித்திட்டத்துக்காக கிடைத்த ரூபா 574,321 இல் ரூபா 150,746 ஐந்தொகையில் ஏனையவைகளின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் சமூக உள சுகாதார நிகழ்ச்சித்திட்டத்துக்குப் பயன்படுத்தப் பட்ட அந்தத் தொகை வருமானச் செலவுக் கணக்கில் வெளிப்படுத்தப்படவில்லை.

(கு) மீளாய்வாண்டு தொடர்பான குத்தகைக் காணிகள் மற்றும் கட்டிடங்களின் காலக் கழிவான ரூபா 191,226 தொகை நட்டக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன் பகிர்வுக்காக முன் கொண்டு வரப்பட்ட வருமானச் செலவுக் கணக்கு மீதிக்கெதிராக பதிவழிக்கப்பட்டது.

(கூ) 1998 இற்கான கணிப்புச்சபை அறிக்கையின்படி குறைவாகக் காணப்பட்ட 15 தட்டெழுத்தாளர் மேசைகளின் பெறுமதி பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்பட்டிருக்காததுடன் கணக்குகளில் தேவையான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(கெ) உத்தியோகத்தர் கடன்கள் மற்றும் பிணை முறி கடப்பாடுகளின், கணக்குகள் முறையே ரூபா 23,807 மற்றும் ரூபா 905,223 ஆல் மேலதிக அறவீடுகளைச் செலவில் பதிந்ததன் விளைவாக குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(கே) 1975, 1979 மற்றும் 1980 ஆம் ஆண்டுகளில் பல்கலைக்கழகத்தினால் யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரிடம் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 43,279 தொகை கணக்குகளில் வெளிப்படுத்தப்படவில்லை.

(கை) தற்போது வவுனியா வளாகமென்ற பெயருடைய இணைந்த பல்கலைக்கழகக்கல்லூரிக்கு உடைமையாக்கப்பட்ட பூந்தோட்டத்திலுள்ள 25 ஏக்கர் முடிக்குரிய காணியும் பார்க் றோட்டிலுள்ள 1/2 ஏக்கர் காணியும் பெறுமதி கணப்பிட்டு கணக்கிற்குக் கொண்டு வரப்படவில்லை.

(கொ) மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட மீளாய்வாண்டில் தொலைந்துபோன புத்தகங்களின் பெறுமதி ரூபா 15,903 தொலைந்து போன புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளுக்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக புத்தகங்கள் மற்றும் பருவ வெளியீடுகளுக்கு செலவு வைக்கப்பட்டது.

(கோ) மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படாத வெளிநாட்டு வழங்கலுக்காக 2000 ஆம் ஆண்டில் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களின் பெறுமதியான ரூபா 3,810,359 இறக்குமதி வழங்கல் முற்பணக் கணக்கிற்கு தாக்கல் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான செலவாகக் கருதப்பட்டது.

*2.3.2. கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்.*- கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டியவை தொடர்பான முறையே ரூபா 244,514,395 மற்றும் ரூபா 14,296,315 தொகைகளுக்கான உறுதிப்படுத்தல்கள் பெறப்படவில்லை.

*2.3.4. கணக்காய்விற்கான சான்றுகளின்மை.*- ரூபா 837,089,345 மொத்தத் தொகை கொண்ட கணக்குகளிலுள்ள 52 விடயங்களை விபரமான பட்டோலைகள், மெய்மையாய்வு அறிக்கைகள் முதலியன இன்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்யவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை.

*2.3.5. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை.*- கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பின்வரும் சட்டங்கள், நிதிப்பிரமாணங்கள், தாபன விதிக்கோவை, சுற்றுநிருபங்கள், முதலியவற்றின் ஏற்பாடுகளுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

(அ) உயர்கல்வி நிறுவனங்களுக்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தாபன விதிக்கோவை
V ஆம் அத்தியாயத்தின் 7:6 தொடக்கம் 7:6:2 வரையான பிரிவுகள், XX ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு, XXVII ஆம் அத்தியாயத்தின் 9:4 ஆம் பிரிவு, XXIV ஆம் அத்தியாயத்தின் 3:1 ஆம் பிரிவு, XXVII ஆம் அத்தியாயத்தின் 9:1 ஆம் பிரிவு, III ஆம் அத்தியாயத்தின் 30 ஆம் பிரிவு, XVII ஆம் அத்தியாயத்தின் 5:2 ஆம் பிரிவு.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டம்
பிரிவுகள் 71 (1) மற்றும் 71 (2)

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்று நிருபங்கள்
(i) 1980 பெப்புருவரியின் 63 ஆம் இலக்கத்தின் பிரிவு 6 (3) .
(ii) 1975 மார்ச்சு 13 இன் 47 ஆம் இலக்க நிதி மற்றும் வழங்கல்கள்.

(ஈ) திறைசேரிச் சுற்றுநிருபங்கள்
1978, திசெம்பர் 19 இன் 842 ஆம் இலக்கம், 1980, பெப்புருவரி 8 இன் 47 ஆம் இலக்கம், 1979, யூலை 29 இன் 828 ஆம் இலக்கம், 1973, திசெம்பர் 17 இன் 58 ஆம் இலக்க ஒப்பந்த சுற்றுநிருபம்.

(உ) நிதிப்பிரமாணங்கள்
இலக்கங்கள் 264(1), 570, 571, 700(5), 754 மற்றும் 880

(ஊ) 1982 இன் 43 ஆம் இலக்க முத்திரைத் தீர்வைச் சட்டம்

**3. நிதிசார் மற்றும் தொழிற்பாட்டு மீளாய்வு**

3.1 ***நிதிசார் விளைவுகள்.***-மீளாய்வாண்டில் பல்கலைக்கழகத்தின் தொழிற்பாட்டினால் ஏற்பட்ட விளைவான ரூபா 59,192,658 பற்றாக்குறையை முன்னைய ஆண்டின் ரூபா 40,377,386 பற்றாக்குறையுடன் ஒப்பிடும்போது ரூபா 18,815,272 ஆல் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பைக் காட்டுகின்றது.

3.2 ***சிக்கனமற்ற நடவடிக்கைகள்.***-
***பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.***

(அ) 2000 ஆம் ஆண்டில் ரூபா 153,450 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட நிழற்படப் பிரதி இயந்திரமொன்றை இக் கிளையின் பயன்பாட்டுக்கு நிழற்பட பிரதி இயந்திரம் அவசியம் தேவையானதா என்பதைக் கருத்திற்கொள்ளாது கொழும்பு களஞ்சியத்திற்குக் கொடுக்கப்பட்டது.

(ஆ) ரூபா 38,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட 38 கைபிடிக் கதிரைகள் தரங்குறைந்த பலகைகளில் உற்பத்தி செய்யப்பட்டதனாலும் தயாரிப்புக் குறைபாடுகளினாலும் நூலகத்தில் விடப்பட்டிருந்தன.

3.3 ***மெதுவாக நகரும், பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்:-***

(I) ரூபா 421,470 கிரயத்தில் அச்சிடப்பட்ட 23 வெளியீடுகளின் 4428 புத்தகங்கள் நீண்டகாலமாக வழங்கப்படாதும் அவற்றைக் கைதவிர்க்க நடவடிக்கை எடுக்கப்படாதும் இருந்தன.

(II) ரூபா 17,160 மீதியுள்ள கிளிநொச்சி மக்கள் வங்கியின் 777 ஆம் இலக்கக் கணக்கு 1996 இலிருந்து செயற்படவில்லை.

(III) ரூபா 116,600 பெறுமதியுடைய 56 மூலதன விடயங்கள் நீண்டகாலமாக களஞ்சியத்தில் பயன்படுத்தாது விடப்பட்டிருந்தன.

(IV) உபயோகத்துக்கு தகுதியற்றதால் 1340 றீம்கள் தட்டெழுத்துக் கடதாசி நீண்டகாலமாக, பாவனையற்று விடப்பட்டன.

(V) 1999 இன் பட்டமளிப்பு விழாவிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,500 பெறுமதியுடைய 1,500 மீற்றர் நீளமான நாடாக்கயிறு அவை குறித்த நோக்கத்துக்கு தகுதியற்றதென உபயோகிக்கப்படவில்லை.

(VI) பாவனைக் காலம் முடிந்த ரூபா 13,308 பெறுமதியான 25 மருந்து வகைகள் 7 நாட்கள் தொடக்கம் 800 நாட்கள் வரையான காலத்துக்கு மருந்துக் களஞ்சியத்தில் பாவிக்காது வைக்கப்பட்டிருந்தது.

3.4 ***இனங்காணப்பட்ட நட்டங்கள்.***-
இடைப்போக்கிலுள்ள இரசாயனப் பொருட்களினதும் காசுக்களவினதும் மற்றும் நாட் குறிப்புக்கள், நாட்காட்டிகளின் விற்பனையாலும் ஏற்பட்ட நட்டங்களின் காரணமாக மீளாய்வாண்டின்போது ரூபாத 49,914 பெறுமதியிலான நட்டங்கள் பல்கலைக்கழகத்துக்கு ஏற்பட்டது.

3.5 *செயற்திட்டங்களில் தாமதங்கள்.*-
1981 ஆம் ஆண்டு தொடக்கம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட பல்வேறு செயற்திட்டங்களின் கீழான நிருமாண வேலைகள், விடுவிக்கப்படாத பகுதிகளுக்கு நிருமாணப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் காரணமாக நிறைவு செய்யப்படவில்லை. தற்போது அவற்றில் சில செயற்திட்டங்கள் மீள ஆரம்பிக்கப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளை ஏனையவை இதுவரை மீள ஆரம்பிக்கப்படவில்லை.

3.6 ***குறித்த நோக்கத்துக்கான நிதியத்தின் பயன்பாடு.***-
குறித்த நோக்கங்களுக்காகக் கிடைத்த ரூபா 6,247,965 மொத்தத் தொகையான மானியங்கள் அவை அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்கு பயன்படுத்தப்படவில்லை.

3.7 ***ஊழியர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவுக்காக ஒரு நிதியத்தை தாபித்தல்.***-
மீளாய்வாண்டு முடிவில் பல்கலைக்கழக உத்தியோகத்தருக்கு பணிக்கொடைகளைக் கொடுப்பதற்காக ரூபா 68,101,463 தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அவ்வப்போது ஏற்படும் பொறுப்புக்களைத் தீர்பபதற்கு ஒரு நிதியம் உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

3.8 ***பாதீட்டுக் கட்டுப்பாடு.***-
பாதீட்டுக்கும் உள்ளபடியானவற்றுக்குமிடையில் பாரிய வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் ஒரு பயன்மிக்க கருவியாகப் பயன்படுத்தப்படாதமையை இது காட்டுகின்றது.

4 ***முறைமைகளும் கட்டுப்பாடுகளும்.***-
கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச் சட்டத்தின் 13 (7) (ஏ) பிரிவின் பிரகாரம் அனுப்பப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) தனிநபர் கோவைகளைப் பேணுதல்.
(ஆ) நிலையான சொத்துக்கள்
(இ) கடன்பட்டோர்
(ஈ) முற்பணங்கள்
(உ) கொள்வனவுகள்
(ஊ) பாதீடு
(எ) ஒப்பந்த நிருவாகம்
(ஏ) களஞ்சியங்கள்
(ஐ) நன்கொடை நிதியம்
(ஒ) உள்ளகக் கணக்காய்வு

எஸ். சீ. மாயாதுன்னே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்புரை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 2001, திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கணக்குகள் மீதான கணக்காய்வு 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108(1) மற்றும் 111 ஆம் பிரிவுகளுடனும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் (7) ஆம் உப பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செய்யப்பட்டது. இக்கணக்குகள் மீதான எனது அவதானிப்புரைகள் பல்கலைக்கழகங்கள் அதிகாரச் சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக உபவேந்தருக்கு முகவரியிடப்பட்ட சம திகதியிட்ட எனது அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எஸ். சீ. மாயாதுன்னே,
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களம்,
கொழும்பு 07.
2003, சனவரி 21.

**2001.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணக்குகள் மீது கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையின் மீது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆளுநர் சபையின் அவதானிப்புகள்**

2.3.1. (அ) அட்டுறு முறையில் கணக்குக்கு எடுப்பதைவிட காசு அடிப்படையில் இதனை கணக்குக்கு எடுப்பது நடைமுறைக்கு சாத்தியமானது.

(ஆ) போக்குவரத்து செலவினத்திற்கான ஒதுக்கீடு நடைமுறைச் செலவுப் பாதீட்டில் உள்ளடக்கப்படுவதால் இச்செலவு வருமானச் செலவு கணக்கிற்கு தாக்கல் செய்யப்படுகிறது.

(இ) வட்டியானது அட்டுறு முறையில் கணக்கிற்கு எடுக்கப்படுகின்றது.

2.3.2. (அ) வங்கி நேரடி வரவு ரூபா 34,082 செலவு ரூபா 3,920,000 அடையாளம் காணப்பட்டு அவை 2002 ஆம் ஆண்டு கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) இப்பொருட்கள் நீண்ட காலத்திற்கு பயன்படுத்தப்படாமை காரணமாகவும் இதற்கான நிதி ஏற்பாடு மீண்டுவரும் செலவினப் பாதீட்டில் காணப்படுவதாலும் இவை நுகர்ச்சிப் பொருட்களாக கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

(இ) திருமதி சி. பிரபாகரன், திருமதி எஸ். எம். சி. மகேந்திரன், திரு. ரி. கலாமணி ஆகியோர் தற்பொழுது சேவையில் உள்ளனர். திருமதி ஆர். ஞானகுமாரனுக்கும் திரு. என். ஞானகுமாரனுக்கும் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) சேமலாப நிதியத்தை மீளளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் பொழுது மூன்று மாதங்கள் முன்னறிவித்தல் கொடுக்காமைக்கான தொகை சேமலாப நிதியத்திலிருந்து கழிக்கப்படவேண்டிய தொகையாக கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

(உ) 2001 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு 95/96 ஆம் ஆண்டிற்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவை மேற் கொள்வதற்கு போதுமானது.

(ஊ) (அ) இது 2004 ஆம் ஆண்டுக்கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
(ஆ) 2001 ஆம் ஆண்டுக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது.
(இ). இப்பொருட்கள் 1995 ஐப்பசி/1996 சித்திரை இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற இடப்பெயர்வின் பொழுது ஏற்பட்ட இழப்புக்களாகும். இவை 1997 ஆம் ஆண்டு கணக்கில் எடுக்கப்பட்டுள்ளது.

(எ) வருடாந்த இருப்பெடுப்பு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் பூர்த்தி செய்வதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

(ஏ) ரூபா 46,080 பெறுமதியுடைய இழந்த புத்தகங்கள் 31.03.2001 இல் நடைபெற்ற 250 ஆம் பேரவைக் கூட்டத்தின் அனுமதியுடன் பதிவழிக்கப்பட்டது.

(ஐ) 1997/1998 காலப்பகுதிக்கான சம்பளம், ஊக்குவிப்புப் படி மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடு 2001 ஆம் ஆண்டு பாதீட்டில் மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் இக்கொடுப்பனவுகள் 2001 ஆம் ஆண்டில் செய்யப்பட்டன.

(ஒ) பல்கலைக்கழக அதிகாரிகள் 2002, சித்திரை மாதம் வரும்வரை கிளிநொச்சி விவசாய பீடத்திற்கு செல்லக்கூடிய சூழல் காணப்படவில்லை. எனவே கிளிநொச்சி விவசாய பீடத்தின் இழப்புக்களை மதிப்பீடு செய்து அவற்றை கணக்கிற்கு எடுக்க முடியவில்லை. 2004 ஆம் ஆண்டுக்கணக்கில் இவற்றை சேர்த்துக்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஓ) கட்டடங்கள் திணைக்களத்திலிருந்து வேலை பூர்த்தி ஆக்கப்பட்டமைக்கான ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதும் இவை சொத்துக்கள் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

(ஔ) கூடுதலான முற்பணங்கள் 1990 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன. பல தடவைகள் நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்ட பொழுதும் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பிரதான பொறியியலாளரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கப்பெறவில்லை.

(ஃ) பெறுமதி எடுக்கக்கூடியதாகவிருந்த காணிகளின் தொகை காணி கட்டிடங்கள் கணக்கிலிருந்து வேறாக்கப்பட்டு பேரேட்டில் தனியான கணக்கில் காட்டப்பட்டதுடன் 2003 ஆம் ஆண்டு ஐந்தொகையிலும் அவை வேறாகக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் காணிகள் மீது எவ்வித பெறுமானத் தேய்வும் செய்யப்படவில்லை.

(க) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மாதிரிப்படிவத்திற்கு அமைவாக நிலையான சொத்துக்கள் 2002 ஆம் ஆண்டுவரை காட்டப்பட்டது. 2003 ஆம் ஆண்டு கணக்கிலிருந்து இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இவை ஐந்தொகையில் காட்டப்படுகின்றன.

(கா) இது 2003 ஆம் ஆண்டுக்கணக்கில் காட்டப்பட்டுள்ளது.

(கி) கொழும்பிலுள்ள களஞ்சியம் ஓர் மரபுமுறைக் களஞ்சியமன்று, இது யாழ்ப்பாணத்திற்கு பொருட்கள் அனுப்பப்படும் வரை அவற்றை வைத்திருப்பதற்கான ஓர் தற்காலிக ஏற்பாட்டு இடமாகும். எனவே அப்பொருட்கள் யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதான களஞ்சியத்திற்கு வந்து சேரும் வரை களஞ்சியத்திற்கு பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களாக கணக்கிடப்படுவதில்லை.

(கீ) 2003 ஆம் ஆண்டில் இருந்து சகல சுய நிதியிட்ட கற்கைநெறிக் கணக்குகள் யாவும் வருமான செலவினக் கணக்கில் காட்டப்படுகிறது.

(கு) 2003 ஆம் ஆண்டுக் கணக்கிலிருந்து குத்தகையில் ஆதனப்பதிவழிப்பு வருமானச் செலவினக் கணக்கில் காட்டப்படுகிறது.

(கூ) இவ்விடயம் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

(கெ) மேலதிகமாகக் கழிக்கப்பட்ட கடன் தொகை பேரேட்டுக்கணக்கில் தனியாக காட்டப்படுவதுடன் அவை வரவு மீதிகளுக்கு எதிராக ஈடுசெய்யப்படவில்லை.

(கே) யாழ். அரசாங்க அதிபருக்கு இவ்விடயம் தொடர்பாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. பதில் கிடைக்கப்பெற்றதும் தேவையான திருத்தங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்படும்.

(கை) இது 2002 ஆம் ஆண்டுக் கணக்கில் சீராக்கப்பட்டுள்ளது.

(கொ) புத்தகங்களும் பருவ இதழ்களுக்குமான கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக இழப்புக்களின் கழிப்பனவுகளை புத்தக இழப்புக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(கோ) நிதியாண்டு முடிவில் வங்கி வீதப்படி வட்டி கணக்கிடப்பட்டு அத்தொகை வட்டி வருமதிக்கணக்கில் காட்டப்படுகிறது.

(கௌ) நாணயக் கடிதங்களின் பெறுமதி இறக்குமதி முற்பண கணக்கு வழங்கலில் காட்டப்பட்டுள்ளது.

2.3.3 வரவேண்டிய செலுத்தப்படவேண்டிய கணக்குகள்
வருமதிக்கணக்கில் காட்டப்பட்டுள்ள தொகையில் சுமார் 95% ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களாகும். ஆகவே அவற்றை உறுதிப்படுத்தவேண்டிய தேவை ஏற்படவில்லை. அவ்வாறே செலுத்தப்படவேண்டிய தொகையில் 95 வீதமானவை மாணவர் வைப்புப்பணமாகும்.

2.3.4 போதிய விபரங்கள் தரப்படாமையால் இதுபற்றி கருத்துத் தெரிவிக்க முடியவில்லை.

2.3.5 சட்டதிட்டங்களையும் மற்றும் பிரமாணங்களையும் முடிந்த வரையில் நடைமுறைப்படுத்துவதற்குரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

3.2 (அ) உலக பல்கலைக்கழக சேவை (WUS) ஓர் சேவை நிலையமாகும் அதனால் மின்சாரக் கட்டணம் கழிக்கப்படவில்லை. எனினும் மின்சாரக்கட்டணத்தை கழிப்பதற்கு தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) நிழற்பட பிரதி சேவையை வெளியில் பெற்றுக் கொள்வதற்கு எடுக்கும் நேரத்தையும் செலவையும் கவனத்திற்கு எடுக்கும் பொழுது நிழற்படப்பிரதி இயந்திரமொன்றை வழங்குவது மிகவும் வசதியானதும் சிக்கனமானதும் ஆகும்.

(இ) நூலகரால் வழங்கப்பட்ட பொருட்களின் தரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

3.3 (I) பெரும்பாலான புத்தகங்கள் ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்டவையானதால் அவற்றிற்கு பொது மக்களிடமிருந்து அதிக வரவேற்பு காணப்படவில்லை.

(II) மக்கள் வங்கி கிளிநொச்சிக்கிளையின் கணக்கிலக்கம் 777 உம் இலங்கை வங்கி கிளிநொச்சிக் கிளையின் கணக்கிலக்கம் 3656 உம் மூடப்பட்டு அவற்றின் மீதிகள் யாழ்ப்பாணக் கணக்குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

(iii) நுகர்ச்சிக்குப் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் காணப்படும் பொருட்களை நீக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(iv) 2003.12.31 இல் களஞ்சியத்திலிருந்த தட்டச்சுத் தாள்களின் எண்ணிக்கை 207 நீம்களாகும்.

(v) இவற்றை நீக்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

(vi) காலாவதியான மருந்துகளை அழிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.5 கட்டட அமைப்புகளில் காணப்படும் காலதாமதம்
1996 வரை யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழல் காரணமாக எவ்வித கட்டுமானப்பணிகளையும் பூர்த்தியாக்க முடியவில்லை. மேலும் 2002 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஏ9 பாதை திறக்கப்படும்வரை தகுதியான ஒப்பந்தக்காரர்களையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. எனினும் தற்சமயம் பின்வரும் கட்டுமானப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.
1. பிரதான நூலகக் கட்டிடம்
2. மாணவர் நிலையம்
3. கலைப்பீடக் கட்டிடத் தொகுதியின் நாலாவது கட்டிடம்
பின்வரும் கட்டுமானப்பணிகள் முன்னேற்றகரமாக நடைபெறுகின்றன.
1. கலைப்பீடக் கட்டிடத் தொகுதிக் கட்டிடம் ஐந்து
2. இராமநாதன் நுண்கலைப்பீடக் கட்டிடம்

3.6 குறிக்கப்பட்ட நிதியத்தின் பயன்பாடு
குறிக்கப்பட்ட நிதியத்தின் பெரும்பகுதி அறக்கொடை நிதியத்திலிருந்து பெறப்பட்ட வட்டித் தொகையாகும். அறக்கொடை நிதிய நிபந்தனைகளுக்கமைய வெகுமதியை பெற்றுக் கொள்வதற்கு தகுதியான மாணவர்கள் காணப்படாதவிடத்து அவ்வட்டி மேலும் அதிகரித்துச் செல்கின்றது. ஏனைய நன்கொடைகள் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்படுகின்றன.

3.7 பணிக்கொடை ஏற்பாட்டை முதலீடு செய்வதற்கு தேவையான நிதியை திறைசேரி வழங்குவதில்லை.

8-796

---

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1986 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"புளோ இன்டனெசனல் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1999.11.17 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "புளோ இன்டனெசனல் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "புளோஇன்டநெசனல் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது தான் ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத் திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர்நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்,

என்(பீவிஎஸ்) 24976
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
20 யூலை, 2006.
8-771

---

### 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

"பிரசன்ன மெடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373(3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2004. 01. 23 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பிரசன்ன மெடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "பிரசன்ன மெடிகல்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" என்னும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத் திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர்நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்கு கின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்,

என்(பீவிஎஸ்) 36441
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டி. ஆர். விஜேவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10.
20 யூலை, 2006
8-772

---

### கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் 95332 - டென்ஸில் அஜித் குமார கமகே கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் 30.05.2006 ஆந் திகதியன்று நடாத்தப்பட்ட கூட்டமொன்றில் விசேடமாகவும் ஏகமனதாகவும் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த டென்ஸில் அஜித் குமார கமகே என்பவர் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு ஐ. எஸ். விஜேசேகரவின் 16.11.2000 ஆந் திகதியுடைய முறிவு இலக்கம் 567 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாதலாலும், அத்துடன் 10.03.2006 ஆந் திகதியன்று சொல்லப்பட்ட முறி மூலம் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ரூபா 26,35,795.40 தற்போது வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் இதற்கான அட்டவணையில் கீழ் விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட இலக்கம் 567 முறி மூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 26,35,795.40 பணத்தொகையுடன் ரூபா 17,49,173.48 பணத்தொகைக்கு 11.03.2006 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து (பணம் செலுத்தியபின் அவைகளை கழித்து) அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியின் இலக்கம் 99 இல் உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், காலி நான்கு கிரவட்சுக்கள் போபப கிராமத்தில் அமைந்துள்ள லொட் 2 மாரபல்கேவத்த மற்றும் லொட் 5 பரவ தினற்கேவத்த அல்லது வடுகேவத்த என்ற இரண்டு காணிகள் ஒன்றாக்கப்பட்ட நிலஅளவையாளர் ஏ. மு. சி. பெர்னாந்து வின் 5.5.1980 ஆந் திகதியுடைய வரைபடம் இல. 36 இல் காண்பிக்கப் பட்ட வரைபடத்தில் நிலஅளவையாளர் யூ. டி. சி. குணசிங்க வின் 16.10.1994 வரைபடம் மூலம் பகுதிபடுத்திய காணி துண்டு களான லொட் 2பி1 மற்றும் லொட் 2பி யின் பகுதியான இக் காணியின் எல்லைகள் - வடக்கு : இட்டகல்வத்த ; கிழக்கு : பரவதினேஸ்கேவத்த அல்லது வடுகேவத்த மற்றும் வடிகேவத்த அல்லது நடுகொலத்த காணியின் லொட் 3 மற்றும் 4 ; தெற்கு : லொட் 2பி2 மற்றும் லொட் 2பி3 (10 அடி பாதை) ; மேற்கு : மாரம்பேகேவத்த காணியின் லொட் 1 இக் காணியின் எல்லைகள் கொண்ட (0ஏ. 0று. 16.88பே.) இக் காணியின் காலி பதிவகத்தில் ஏ 489/209 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி வரைபடம் இலக்கம் 36 இல் காண்பிக்கப்பட்ட பாதைக்கு ஒதுக்கப்பட்ட லொட் 2பி3 மற்றும் 2 சி யின் ஊடாக செல்லும் பாதை பாவிக்கவும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

8-896

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"கோல்டன் க்ரிஸ் எக்ஸ்போட்ஸ் (பிரைவட்) ஐ லிமிட்டெட்"நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1991.12.09 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "கோல்டன் க்ரிஸ் எக்ஸ்போட்ஸ் கம்பனி (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும்போது "கோல்டன் க்ரிஸ் எக்ஸ்போட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியான அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர்நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்,

என்(பீவிஎஸ்) 8450
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
20 யூலை, 2006

8-774

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்**

"ராஜபக்ஷ எசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 1999.12.14 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "ராஜபக்ஷ எசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெட்டியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "ராஜபக்ஷ எசோசியேட்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலுவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர்நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

என்(பீவிஎஸ்) 25188
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.
19 யூலை, 2006.
8-773

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம்**

"பைன் பூட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின்ஏற்பாடுகளுக்கமைய 1986.09.12 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "பைன் பூட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக்கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "பைன் பூட்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவாளர் அலவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்,

என் (பீவிஎஸ்) 2884
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, யூலை 20.
8-775

---

**1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டம்**

"த எசோசியேசன் ஒப் கன்சல்டிங் என்ஜினியர்ஸ் கொழும்பு" ஐ நீக்கிவிடுவதற்கான 373 (3) ஆம் பிரிவின்கீழ் அறிவித்தல்

கம்பனிகள் கட்டளைச் சட்டத்தின் (பிரிவு 145) ஏற்பாடுகளுக்கமைய 1981.08.11 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்ட "த எசோசியேசேன் ஒப் கன்சல்டிங் என்ஜினியர்ஸ் கொழும்ப்" எனும் கம்பனி இயங்காமல் இருப்பதாக அல்லது வியாபாரம் மேற்கொள்ளாமல் இருப்பதாக நியாயமான காரணங்களைக் கொண்டு நம்பமுடிகிறது.

1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் 373 (3) ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளராகிய டயஸ் கருணாரத்ன ஹெற்றியாராச்சி ஆகிய நான் இத்திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடையும் போது "த எசோசியேசன் ஒப் கன்சல்டிங் என்ஜினியர்ஸ் கொழும்பு" எனும் கம்பனியானது அது ஏன் கலைக்கப்படக் கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டப்படாதவிடத்து கம்பனிகள் பதிவானர் அலவலகத்திலுள்ள பதிவேட்டிலிருந்து அதனது பெயர் நீக்கப்பட்டு கம்பனி மூடப்பட்டுவிடும் என்பதற்கான அறிவித்தலை இத்தால் வழங்குகின்றேன்.

டி. கே. ஹெற்றியாராச்சி,
கம்பனிகள் பதிவாளர்.

ஏ82
கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
"சமாகம் மெதுர",
400, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,
2006, யூலை 26.
8-776

வரையறுக்கப்பட்ட இலங்கை ஐக்கிய செய்திப் பத்திரிகை கம்பனியினால் அச்சிட்டு விநியோகிக்கப்பட்டது.
www.documents.gov.lk